# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097178

1. District : மாவட்டம் Pudukkottai    PS: காவல்நிலையம் V&AC    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 4/19    Date: நாள் 1.3.19

2. (i) Act சட்டம்: Crpc and Prevention of Corruption (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 102 Crpc and 7 (A) of Prevention of Corruption (Amendment) Act 2018

(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் —    Date from : நாள் முதல் 1.11.2018    Date to : நாள் வரை

Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 01.45    Time to : நேரம் வரை 05.30hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 1.11.18    Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும்    Regional Transport Office Pudukkottai 2km North

Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. Sathiyanarayanan    (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் T. Subramaniyam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் District Deputy Inspection Cell Officer, Trichy    (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயுப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. K. Nizam S/o Kaja Moideen, Nizam consultancy, Ashok Nagar Extension, Ponnagar, Pudukkottai 2. M. Sathik S/o Mohamed Ibrahim, Manager NNL Bus Company, Pudukkottai 3. T. C. Aravinthan S/o Chendirasekar, Aswin consultancy, Santhanathapuram Pudukkottai. 4. V. Kamal S/o Velappan, Nithiya Motors Karaikudi 5. S. Muthukumar S/o Shanmugam, Alamelu Transport, Pudukkottai 6. K. Senthil S/o Kuliyan, reporting Lakshmi Nagar, Pudukkottai 7. K. Govindasamy S/o Kaliyaperumal, Haaikaran Tractors Pudukkottai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Got order from DVAC

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

கடந்த 01-11-2018ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மதியம் 01.45 மணி முதல் மாலை 05.30 மணி வரை புதுக்கோட்டை வட்டார போக்குரவத்து அலுவலர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு. சத்தியநாரயணன், வயது 46 / 2018, த / பெ. சுப்பிரமணியம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை வட்டார போக்குரவத்து அலுவலர் அலுவலகத்தில் பணியாற்றும் பொது ஊழியர்கள் வாகன ஒட்டுநர் உரிமம் வழங்கல், பதிவு சான்று வழங்கல் போன்ற அலுவலக பணிகளை செய்வதற்காக இடைத்தரகர்கள் மற்றும் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி பணியாளர்கள் மூலம் பொது மக்களிடம் இருந்து கையூட்டு பெற்று வருவதாக

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
1/3/19

15. Date & Time of despatch to the court: -
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
1.3.2019 at 10.30hr

Name: பெயர் Y. Charlesnepoliamy
Rank: நிலை Inspector of police .......No. எண்
VQAC, Pudukkottai

* GCP-240-34(Type-2) 90 000 Cps -21 3 16(HCL-12)p 2

கிடைத்த தகவலின் பேரில் 01.11.2018ஆம் தேதி நானும் திரு.முத்துச்சாமி, தனி வட்டாட்சியர் (அகதிகள்) புதுக்கோட்டை மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்டோம். சோதனையின் போது திரு.செந்தாமரை, மோட்டர் வாகன ஆய்வாளர், நிலை–1, நேர்முக உதவியாளர் திருமதி.கிரிஜா, திருமதி.புவனேஸ்வரி, உதவியாளர், திரு.அங்கமுத்து, இளநிலை உதவியாளர், திருமதி.கீதா, பதிவறை எழுத்தர், திருமதி.பூங்கமலம், தட்டச்சர், திருமதி.ராதா கணக்கர், திருமதி.அம்சவள்ளி இளநிலை உதவியாளர், திருமதி.பாண்டிசெல்வி அலுவலக உதவியாளர், திரு.சரவணக்குமார், திரு.தமிழ்வாணன், எல்காட் ஊழியர்கள், புரோகிராமர் திரு. மாரிசெல்வம் ஆகியோர் அலுவலகத்தில் அலுவலில் இருந்தனர். வட்டார போக்குரவத்து அலுவலரை பற்றி விசாரிக்க அவர் ஆலங்குடி பிரிவு அலுவலகத்திற்கு சென்றிருப்பதாக தெரியவந்தது. இவர்களைத் தவிர மோட்டர் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே இருந்த ஹாலில் இவர்களைத் தவிர மோட்டர் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே உள்ள அறையில் 1. திரு.நிஜாம், த/பெ காஜா மைதீன், அசோக்நகர் விரிவாக்கம், பொன்நகர், புதுக்கோட்டை நிஜாம் கன்ஸ்டல்சன்சி, 2. திரு.குருபிரசாத், த/பெ தேவன், வெங்கடேஸ்வரா ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் 3.திரு.சாதிக், த/பெ முகமது இப்ராகிம், மேலாளர், என்.என்.எல் பஸ் கம்பெனி, 4.திரு.அரவிந்தன், த/பெ சந்திரசேகர், அஸ்வின் கன்ஸ்ட்ரக்சன்ஸ், சாந்நாதபுரம், 5, திரு.கமல், த/பெ வீரப்பன், நித்யா மோட்டார்ஸ், காரைக்குடி, 6.திரு.ரமேஷ், த/பெ முத்துராமலிங்கம், நித்யா மோட்டார்ஸ்இ காரைக்குடி, 7.திரு.கார்த்திக்கேயன், த/பெ ஜோதி, கே.வி ஹோண்டா மோட்டார்ஸ், புதுக்கோட்டை 8.திரு.ராஜாமுகமது, த/பெ சாகுல் அமீது, சிட்டி ஓட்டுநர் பயிற்சி பள்ளி, திருமயம், 9.திரு.முத்துகுமார், த/பெ சண்முகம், அலமேலு டிரான்ஸ்போர்ட், புதுக்கோட்டை 10.திரு.கோவிந்தசாமி, த/பெ கலியபெருமாள், ஹரிகான் டிராக்டர்ஸ், புதுக்கோட்டை 11.திரு.செந்தில், த/பெ கலியமூர்த்தி, புரோக்கர், லெட்சுமி நகர், புதுக்கோட்டை ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தனர். மோட்டர் வாகன ஆய்வாளரிடம் அலுவலக personal cash register கேட்க அவர் பதிவறை எழுத்தரிடமிருந்து பெற்று ஆஜர் செய்ததை தணிக்கை செய்ய அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தாமரை என்பவர் ரூ.500/–ம், திரு.அங்கமுத்து என்பவர் ரூ.100/–ம், திருமதி.பாண்டிசெல்வி ரூ.220/–, திருமதி.கீதா ரூ.330/– திருமதி.பூங்கமலம் ரூ.250/– திருமதி.அம்சவள்ளி ரூ.230/– திருமதி.ராதா ரூ.500/– திருமதி.புவனேஸ்வரி ரூ.340/– திரு.மாரிச்செல்வம் ரூ.160/– திருமதி.கிரிஜா ரூ.960/–ம் சொந்த செலவுக்கு எடுத்து வந்ததாக எழுதப்பட்டு கையொப்பம் செய்துள்ளனர். அதில் எல்காட் ஊழியர்கள் மட்டும்

எந்த பதிவும் மேற்கொள்ளவில்லை. இன்றைய தின கட்டண விபரத்தை இளநிலை உதவியாளர் திருமதி. அம்சவள்ளியிடம் கேட்க இன்று (01.11.2018) வசூல் செய்த எப்சி கட்டணம், சேவை கட்டணம், உரிமையாளர் மாற்றம் கட்டணம், வாகன அனுமதி கட்டணம் ஆகிய கட்டணங்களாக மொத்தம் ரூ.36,039/- வசூல் செய்ததாக கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அறிக்கை நகல் எடுத்து கொடுத்தார். மேற்கொண்ட தொகையை சரிபார்க்க சரியாக இருந்தது. அந்தப்பணத்தை இளநிலை உதவியாளர் திருமதி.அம்சவள்ளியிடம் கொடுக்கப்பட்டது. மற்றொரு கணக்கரிடம் திருமதி.ராதாவிடம் இன்றைய தின வசூல் செய்த கட்டண விபரங்களை பற்றி கேட்க இன்று (01.11.2018) வசூல் செய்த எப்சி கட்டணம், இணக்கக்கட்டணம், காலாண்டு வரி மற்றும் அதற்குரிய தொழிலாளர் நல வரி ஆகிய கட்டணங்கள் வசூல் செய்ததாகவும், அதில் ரொக்கமாக ரூ.52,443/-என்றும் மற்றும் 3 வங்கி வரைவோலையாக (ரூ.1,900/-, ரூ.28,500/-, ரூ.28,500/-) ரூ.58,900/-ஆக மொத்தம் ரூ.1,13,343/- வசூல் செய்யப்பட்டது என்று கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அறிக்கை நகல் எடுத்து கொடுத்தார். மேற்கொண்ட தொகையை சரிபார்க்க சரியாக இருந்தது. அந்தப்பணத்தை இளநிலை உதவியாளர் திருமதி.ராதாவிடம் கொடுக்கப்பட்டது. மேலும் இன்றைய தினத்தில் (01.11.2018) இணைய தளம் மூலம் ரூ.3,69,840/- தொகை செலுத்தப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.5,17,222/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அலுவலக பொது வருகைப்பதிவேட்டை ஆய்வு செய்ததில் மேற்கண்ட அலுவலர்கள் அனைவரும் கையொப்பம் செய்தும் மற்றும் மற்றொரு வருகைப்பதிவேட்டில் எல்காட் ஊழியர்கள் திரு.சரவணக்குமார், திரு.தமிழ்வாணன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தாமரை என்பவரை சோதனை செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தாமரை அவர்கள் அணிந்திருந்த காக்கி நிற பேண்டின் வலது புற பாக்கெட்டில் இருந்து ரூ.290/-ஐ ஆஜர் செய்தார். அவரிடம் அப்பணத்தை பற்றி விபரம் கேட்க அதற்கு அவர் இன்று காலை அலுவலகம் வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து ரூ.500/. எடுத்து வந்ததாகவும், அதனை சிறப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், பிறகு காலை 09.15 மணியளவில் டெஸ்ட் பார்த்து விட்டு அதன்பிறகு வெளியில் சென்று காலை சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு மற்றும் தண்ணீர் பாட்டில் இதர செலவுகள் செய்தது போக மீதி பணம் ரூ.290/- வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே ரூ290/-ஐ திருப்பி கொடுக்கப்பட்டது. நேர்முக உதவியாளர் திருமதி.கிரிஜா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.540/- இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.960/- எடுத்து வந்ததாகவும், அதில் இன்று அலுவலகத்தில்

புத்தகம் விற்பனை செய்ய வந்தவரிடம் நேஷனல் ஜியாகிரபி என்ற புத்தகம் ரூ.300/– வாங்கியதாகவும், மேலும் காலையில் முன்னரே அலுவலகம் வந்ததால் காலை சிற்றுண்டி சாப்பிட்டது போக மீதி பணம் ரூ.540/– இருப்பதாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் திருமதி.புவனேஸ்வரி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.40/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.340/– எடுத்து வந்ததாகவும், அதில் இன்று அலுவலகத்தில் புத்தகம் விற்பனை செய்ய வந்தவரிடம் நேஷனல் ஜியாகிரபி என்ற புத்தகம் ரூ.300/– வாங்கியதாகவும், மீதி பணம் ரூ.40/– இருப்பதாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பதிவறை எழுத்தர் திருமதி.கீதா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.200/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.330/– எடுத்து வந்ததாகவும், அதில் இன்று அலுவலகத்திற்கு வந்த தபால்காரார் தன்னிடம் கடனாக ரூ.100/– கேட்டதால் ரூ.100/– கொடுத்ததாகவும், ரூ.30/– டீ மற்றும் பலாகாரம் சாப்பிட்டதாகவும், மீதி பணம் ரூ.200/– இருப்பதாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் தட்டச்சர் திருமதி.பூங்கமலம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரிடம் இன்று சிறப்பு பதிவேட்டில் ரூ.250/– கொண்டுவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றி கேட்க அதற்கு அவர் மேற்படி பணத்தில் அ4 பேப்பர் வாங்கிவிட்டதாகவும் கூறி சன் பேப்பர்ஸ், புதுக்கோட்டை என்ற கடையின் பில்லை (எண்.1088) ஆஜர் செய்தார். கணக்கர் திருமதி.ராதா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.50/– இருந்தது. அவரிடம் இன்று சிறப்பு பதிவேட்டில் ரூ.500/– கொண்டுவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றி கேட்க அதற்கு அவர் சரியான விளக்கம் கூறாமல் மவுனமாக இருந்தார். இளநிலை உதவியாளர் திருமதி.அம்சவள்ளி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.230/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.230/– எடுத்து வந்ததாகவும், அதனை சிறப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். சிறப்பு பதிவேட்டை பார்வையிட்ட போது ரூ.230/– பதிவு செய்யப்பட்டிருந்தது. எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக உதவியாளர் திருமதி.பாண்டி செல்வி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.120/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.220/– எடுத்து வந்ததாகவும், அதனை சிறப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அதில் ரூ.100/–ஐ மதிய உணவு வாங்க கொடுத்து விட்டதாகவும் கூறினார். எனவே மீதி பணம் ரூ.120/–ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. புரோகிராமர் திரு.மாரிசெல்வம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.130/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.160/– எடுத்து வந்ததாகவும், அதில் ரூ.30/–ஐ டீ செலவு செய்து விட்டதாக தெரிவித்தார்.

எனவே மீதி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இளநிலை உதவியாளர் அங்கமுத்து என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.70/– இருந்தது. அவரிடம் விசாரிக்க காலையில் செலவுக்காக ரூ.100/– எடுத்து வந்ததாகவும், அதில் ரூ.30/–ஐ டீ செலவு செய்து விட்டதாக தெரிவித்தார். எனவே மீதி பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் எல்காட் ஊழியர்கள் திரு.சரவணக்குமார் மற்றும் தமிழ்வாணன் ஆகியோரை சோதனை செய்ய அவர்களிடம் எந்த பணம் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு எதிரே நின்று கொண்டிருந்த திரு.நிஜாம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,320/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் டூவிலர் கன்ஸ்டல்சன்ஸி வைத்துள்ளதாகவும், மேலும் புரோக்கராக செயல்பட்டு தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு எல்எல்ஆர், மற்றும் ஓட்டுநர் உரிமம் எடுத்து கொடுத்து வருவதாக தெரிவித்தார். மேலும் பணத்தை பற்றி கேட்க எந்தவித விளக்கமும் கூறாமல் மவுனமாக இருந்தார். அதனால் அந்த பணம் ரூ.2,320/–ம் கைப்பற்றப்பட்டது. திரு.குருபிரசாத் என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லை. ஆனால் அவர் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து ஸ்டீல் ராக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்து பதிவேடுகளுக்கு இடையில் ஒரு கருப்பு நிற மணி பர்ஸ் இருந்தது. அந்த பர்ஸை சோதனை செய்ய அதில் ரூ.12,850/– இருந்தது. அது பற்றி குருபிரசாத், நிஜாம் மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி.அம்சவள்ளியிடம் கேட்க யாரும் அந்த மணி பர்ஸ் பற்றி தனக்கு தெரியாது என்றும், தன்னுடையது அல்ல என்றும் தெரிவித்தார்கள். எனவே அந்த பணம் ரூ.12,850/– கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையை சோதனை செய்ய மேற்படி ராக்கில் உள்ள பதிவேடுகளுக்கிடையில் கத்தையாக சுருட்ட பட்ட நிலையில் ரூ.6,910/– மற்றும் ராக்கிற்கு அடியில் தரையில் ரூ.1,500/– சுருட்டப்பட்ட நிலையில் கிடந்தது. அதனை பற்றி மேற்படி நபர்களிடம் கேட்க தனக்கு தெரியாது என்றும், தன்னுடையது அல்ல என்றும் கூறியதால் அந்த பணம் ரூ.8,410/– கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த என்.என்.எல் பஸ் கம்பெனி மேலளார் எம்.எஸ்.சாதிக் என்பவரை சோதனை செய்ய ரூ.6,940/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கேட்க அதற்கு அவர் கம்பெனி பஸ்ஸிற்கு எப்சி கட்ட வந்ததாக தெரிவித்தார். அவரிடம் எப்சி கட்டுவதற்காக கொண்டு வந்துள்ள ஒரிஜனல் ஆர்சி புக், இன்சூரன்ஸ் மற்றும் புகை சான்று பற்றி கேட்க அதற்கு அவர் கம்பெனியில் இருப்பதாகவும் கொண்டு வரவில்லை என்றும் கூறினார். மேலும் எப்சி காட்டுவதற்குரிய வாகனம் ஆஜரில் உள்ளதா என்று கேட்க அதற்கு அவர் வாகனம் கம்பெனியில் இருப்பதாக தெரிவித்ததார். மேலும் எப்சி கட்டணத்தொகையும் அவர் வைத்திருந்த தொகையும் அதிக வேறுபாடாக இருந்ததால் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளாமல் அந்த பணம் ரூ.6,940/–ம் கைப்பற்றப்பட்டது.

மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த திரு.அரவிந்தன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.4,500/- இருந்தது. அப்பணம் பற்றி விளக்கம் கேட்க, அதற்கு அவர் ஆர்டிஓ ஆபிஸில் புரோக்காராக செயல் பட்டு வருவதாகவும், எல்எல்ஆர் மற்றும் ஒட்டுநர் உரிமம் எடுத்து கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் மேற்படி பணத்தை பற்றி கேட்க, மேற்படி பணம் ரூ.4,500/- தனக்கு தெரிந்த ஒருவர் வரி கட்டுவதற்கு கொடுத்ததாக தெரிவித்தார். அதற்கான வண்டி ஆவணகளை கேட்ட போது அவரிடம் அதற்கான எந்த ஆவணமும் இல்லை. மேலும் வரி கட்ட பணம் கொடுத்தவரின் பெயர் முகவரியை கேட்க அது பற்றியும் அவர் கூறாமல் தெரிந்த நபர் என்று மட்டும் கூறினார். இதனால் மேற்படி விளக்க ஏற்றுக்கொள்ளாமல் மேற்படி பணம் ரூ.4500/-ம் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த நித்யா மோட்டாஸ் காரைக்குடியை சேர்ந்த திரு.கமல் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.,7,250/- இருந்தது. மேலும் ஒரு பிளாஸ்டிக் கவரில் பின் போட்டு அதில் புதுக்கோட்டை ஆர்டிஓ தொகை (Pudukkottai RTO Amt) ரூ.450/- என்று மஞ்சள் கலர் அட்டையில் எழுதப்பட்டு உள்ளே வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணம் பற்றி விளக்கம் கேட்க, அதில் 7 வண்டிக்கு லேட் பீஸ் கட்டுவதற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்து ஆவணகளை ஆஜர் செய்தார்,. அந்த ஆவணகளை பார்வையிட்ட போது 3 வண்டிக்கு தலா ரூ.75/- வீதமும், 4 வண்டிக்கு ரூ.40/- என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆக லேட் பீஸ் கட்டுவதற்குரிய தொகை ரூ.385/- என்று தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.385/-ம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மீதி தொகை பற்றி கேட்க சரியான விளக்கம் கூறாததால் மீதி தொகை ரூ.6,865/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி ப்ளாஸ்டிக் கவரில் உள்ள ரூ.450/- பணத்தை பற்றி கேட்க, அதற்கு மேற்படி பணம் ஆர்டிஓவிற்காக கொடுப்பதற்காக கம்பெனியில் இருந்து கொடுத்து அனுப்பியதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.450/-ம் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த திரு.ரமேஷ், நித்யா மோட்டார்ஸ் காரைக்குடி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.,540/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, தனது சொந்த பணம் என்றும், செலவுக்காக கொண்டு வந்த பணம் என்றும், மேற்படி கமலுக்கு துணையாக வந்தேன் என்றும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.540/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த திரு.கார்த்திக்கேயன், கேவி ஹோண்டா, புதுக்கோட்டை என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.160/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விளக்கம்

கேட்க, தற்காலிக பதிவு சம்மந்தமாக விளக்கம் கேட்க நேர்முக உதவியாளரை பார்க்க வந்ததாகவும், மேலும் மேற்படி பணம் தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.160/–ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த திரு.காஜா முகமது, சிட்டி டிரைவிங் ஸ்கூல், திருமயம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/– இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, மேற்படி பணம் தனது சொந்த பணம் என்றும், மேலும் எங்கள் ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலம் 6 நபர்களை டெஸ்டுக்கு ஆஜர் செய்ததாகவும், அதில் ஒருவர் தவிர மற்ற 5 பேரும் தேர்ச்சி பெற்றார்கள் என்றும், அவர்களுக்கு போட்டோ எடுப்பதற்காக நின்று கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.100/–ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த அலமேலு டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் கணக்காராக பணியாற்றும் திரு.முத்துக்குமார், என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.4,090/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கேட்க அதற்கு அவர் கம்பெனி லாரிக்கு எப்சி கட்ட வந்ததாக தெரிவித்தார். அவரிடம் எப்சி கட்டுவதற்காக கொண்டு வந்துள்ள ஒரிஜனல் ஆர்சி புக், இன்சூரன்ஸ் மற்றும் புகை சான்று பற்றி கேட்க அதற்கு அவர் கம்பெனியில் இருப்பதாகவும் கொண்டு வரவில்லை என்றும் கூறினார். மேலும் எப்சி காட்டுவதற்குரிய வாகனம் ஆஜரில் உள்ளதா என்று கேட்க அதற்கு அவர் வாகனம் கம்பெனியில் இருப்பதாக தெரிவித்தார். மேலும் எப்சி கட்டணத்தொகையும், அவர்வைத்திருந்த தொகையும் அதிக வேறுபாடாக இருந்ததால், மேற்படி முத்துகுமாரின் விளக்கம் சரியாக இல்லாததால் அந்த பணம் ரூ.4,090/–ம் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த திரு.செந்தில், லட்சுமி நகர் என்பவரை என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.7,600/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க தான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆர்டீஓ ஆபிஸில் புரோக்கர் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இன்றைய தினம் (01.11.2018) யாராவது டெஸ்ட் மற்றும் எல்எல்ஆர் போடுவற்கு ஆஜர் செய்தீர்களா என்று கேட்தற்கு இன்று யாரையும் ஆஜர் செய்யவில்லை என்றும், சும்மா ஆர்டீஓ ஆபிஸிற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் பணத்தை பற்றி கேட்கும் போது முன்னுக்குபின் முரணாக கூறி கடைசியில் செல்போன் வாகுவதற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். அதனால் அவருடைய விளக்கம் சரியாக இல்லாததால் அந்த பணம் ரூ.7,600/–ம் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நின்று கொண்டிருந்த ஹரிகரன் டிராக்டர்ஸ் கம்பெனியை சேர்ந்த திரு.கோவிந்தசாமி, என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,900/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி

விசாரிக்க அவர் மேற்படி கம்பெனியில் 10 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், பதிவு சம்மந்தப்பட்ட பணிகளை கவனித்து வருவததாவும் தெரிவித்தார். மேலும் இன்று ஏற்கனவே பதிவு செய்த டிராக்டருக்கு பதிவு சான்று வாங்குவதற்காக வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை பற்றி கேட்க அதற்கு அவர் இன்று அவரது தாயார் அவரது தகப்பனாருக்கு மருந்து வாங்குவதற்காக ரூ.2000/- கொடுத்து அனுப்பியதாகவும், அதில் ரூ.100/-க்கு தனது வண்டிக்கு பெட்ரோல் போட்டதாகவும், மீதி பணம் ரூ.1900/- இருந்ததாக தெரிவித்தார். உடனே அவரது தாயாரிடம் செல்போன் (98947 81199) மூலம் தொடர்பு கொண்டு கேட்ட போது பணம் ஏதும் கொடுத்து அனுப்பவில்லை என்று கூறினார். எனவே மேற்படி விளக்கம் சரியாக இல்லாததால் அந்த பணம் ரூ.1,900/-ம் கைப்பற்றப்பட்டது. இச்சோதனையில் முடிவில் மேற்கண்ட நபர்கள் புதுக்கோட்டை வட்டார போக்குரவத்து அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை தவிர கூடுதலாக கட்டணத்தை பெற்றும், மேலும் அவர்களது பயிற்சிப்பள்ளிக்கு வரும் பொது மக்களிடம் கூடுதலாக கட்டணத்தை பெற்றும், அதை மோட்டார் வாகன ஆய்வாளருக்கும் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுத்து காரியத்தை சாதிப்பதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிய வந்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.55,925/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திரு. சத்தியநாராயணன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி).

மேற்படி புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு மேற்படி நபர்கள் மீது வழக்கு பதிவு செய்ய அனுமதி வேண்டி அனுப்பி வைத்த அறிக்கையை தொடர்ந்து மேற்படி தனி நபர்களான 1) திரு.நிஜாம், த/பெ காஜா மைதீன், அசோக்நகர் விரிவாக்கம், பொன்நகர், புதுக்கோட்டை நிஜாம் கன்ஸ்டல்சன்சி, 2) திரு.சாதிக், த/பெ முகமது இப்ராகிம், மேலாளர், என்.என்.எல் பஸ் கம்பெனி, 3) திரு.அரவிந்தன், த/பெ சந்திரசேகர், அஸ்வின் கன்சல்டன்சி, சாந்தநாதபுரம், 4) திரு.கமல், த/பெ வீரப்பன், நித்யா மோட்டார்ஸ், காரைக்குடி, 5.திரு.முத்துகுமார், த/பெ சண்முகம், அலமேலு டிரான்ஸ்போர்ட், புதுக்கோட்டை, 6.திரு.செந்தில், த/பெ கலியமூர்த்தி, புரோக்கர், லெட்சுமி நகர், புதுக்கோட்டை, 7.திரு.கோவிந்தசாமி, த/பெ கலியபெருமாள், ஹரிகரன் டிராக்டர்ஸ், புதுக்கோட்டை ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து 28.02.2019ஆம் தேதி கிடைக்கப்பெற்ற உத்தரவை தொடர்ந்து மேற்படி புகாரின் பேரில் இன்று 01.03.2019 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.04/2019 பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 7 (A) of Prevention of Corruption (Amendment) Act-2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.